கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று முன்தினம் (04.06.2025) சென்னை, பல்லவன் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு சேவைகளை பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் முதற்கட்டமாக விளம்பரப்படுத்தப்பட்ட மாநகர் பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர்.க.நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப.அம்ரித், கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ.இரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அவரது தியாக வரலாறு, சாதனைத் திட்டங்களை நினைவு கூர்ந்து விளக்கும் வகையில், கரூர் மாவட்டத்தில் காவிரி குண்டாறு இணைப்பு திட்டம், சாலை பாலத்துடன் கதவணை கட்டியதை விளக்கி, மாயனூர் காவிரி கதவணையில் பிறந்தநாள் விழா நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமை வகித்து பொதுமக்களுக்கு இனிப்புகள், உணவு, நலத்திட்ட உதவிகள் வழங்கினார். எம்.எல்.ஏக்கள் இரா.மாணிக்கம், க.சிவகாமசுந்தரி, ஆர்.இளங்கோ, கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் - பெருந்துறை - விஜயமங்கலத்தில் - ஜூன் 11 அன்று

வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம் 2025 விழா; முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அழைப்பு!

சென்னை, ஜூன் 6 -

ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்தில் 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ள "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 2025 விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜூன் 11, 2025 அன்று தொடங்கிவைக்கும் விழாவில் உழவர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்றுப் பயன் பெற வேளாண்மை- உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக வேளாண்மைக்கென தனி நிதி நிலை அறிக்கை தயாரித்து, கடந்த நான்கு ஆண்டு களில் உழவர்கள் நலன் காக்க பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன. 2025-26ஆம் ஆண்டிலும் புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை மற்றும் சார்புத் தொழில்களில் நவீன தொழில்நுட்பங்கள், கண்டுபிடிப்புகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர்விளைச்சல் தரவல்ல புதிய பயிர் இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக் கூட்டும் நுட்பங்கள், வேளாண்மையில் மின்னணு தொழில் நுட்பங்கள், சந்தைப்படுத்தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, பாரம்பரிய இரகங்களைப் பரவலாக்குதல், உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், பயிர்க்கடன், பயிர்க்காப்பீடு உள்ளிட்ட சேவைகள், ஏற்றுமதி தொடர்பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தற்போதைய அனைத்து விவரங்களையும் வாய்ப்புகளையும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்தும் அமைப்புகள், ஏற்றுமதியாளர்கள் இயற்கை நல ஆர்வலர்களிடையே ஏற்படுத்திடும் வகையில் இந்த ஆண்டு "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கங்கள் 2025 நடத்தப்பட உள்ளன.

சிறப்பம்சங்கள்!

இந்த ஆண்டின் முதல் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் ஈரோட்டில் நடைபெறுதல், வளர்ந்து வரும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் தொழில்நுட்பங்கள், புதிய இரக வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர் விதைகள், ஒட்டு இரக பழமரக்கன்றுகள், தென்னங்கன்றுகள் மற்றும் பிற வகை மரக்கன்றுகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விற்பனை, உயர் இரக கால்நடைகள் மற்றும் வளர்ப்பு முறைகள், மீன் வளர்ப்பு, வேளாண்மையில் வங்கி சேவைகள் மற்றும் இவை குறித்த கருத்தரங்கம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டு, 11.06.2025 மற்றும் 12.06.2025 ஆகிய இரு தினங்களில் ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகில் "வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு-2025 விழாவினை மிகச்சிறப்பாக நடத்த தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.06.2025 அன்று தொடங்கி வைத்து, உழவர்களுக்கு திட்டப்பலன்களை வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

பங்கேற்கும் துறைகள் மற்றும் நிறுவனங்கள்!

வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை, சர்க்கரைத்துறை, விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்), தமிழ்நாடு உணவு பதப்படுத்தல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம், பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கேற்கின்றன.

இவை தவிர, நுண்ணீர்ப் பாசன நிறுவனங்கள், உர நிறுவனங்கள், பூச்சிக் கொல்லி மருந்து நிறுவனங்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிப்பு நிறுவனங்கள், விதை நிறுவனங்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங்கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத்திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், மா, கொய்யா உள்ளிட்ட பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவைகள், உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் உள்ளார்கள்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங் கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகள், போன்ற நிறுனங்களும் தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் இசைந்துள்ளார்கள்.

கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள்!

உழவர்கள் சார்ந்த அரசின் அனைத்துத் திட்டங்களையும் ஒரே இடத்தில் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இக்கண்காட்சி அமை யும்.

நுண்ணீர்ப் பாசனத்திட்டம், இயற்கை வேளாண்மை, தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், தென்னையில் பயிர்ப்பாதுகாப்பு, பாரம்பரிய நெல் இரகங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம், பசுமைக்குடில், செங்குத்துத் தோட்டம், நீரியல் தோட்டம், மாடித் தோட்டம், வேளாண் இயந்திரமயமாக்குதல், மதிப்புக்கூட்டுதல், முதலமைச்சரின் உழவர்நல சேவை மையங்கள், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மலைவாழ் உழவர் முன்னேற்றத்தி ட்டம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், உயர் இரக கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, மீன்வளர்ப்பு போன்ற உழவர்களுக்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் சிறப்புக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்படும். மேலும், உழவர் செயலி பதிவிறக்கம், அரசு நல உதவித்திட்டங்களில் பயன்பெற பதிவு செய்தல், தமிழ் மண்வள இணையதளம் மூலம் மண்வள அட்டை விநியோகம் போன்ற இணையவழி சேவைக ளைப் பற்றி அறிந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொள்முதல் செய்பவர்விற்பனையாளர் சந்திப்பும் (BuyersSellers Meet) நடைபெற உள்ளது.

உயிர்ம வேளாண்மை தொழில் நுட்பம் மற்றும் இடுபொருள் உற்பத்தி, மகத்துவ மஞ்சள் சாகுபடி முறைகள், வளம்தரும் வாழைசாகுபடி, தென்னை பராமரிப்பு மற்றும் பூச்சி நோய் மேலாண்மை முறை கள், நவீன கரும்பு சாகுபடி மேலாண்மை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல், வேளாண் வணிகம் மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், மாற்றம் தரும் தோட்டக்கலை சாகுபடி, பயிர்த் தொழில்களுக்கு ஏற்ற பக்கத்தொழில்கள் (Secondary Agriculture), உழவர்களின் வருமானத்தை உயர்த்திட மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப் படுத்துதல், வேளாண் இயந்திரமயமாக்கலில் உள்ள சவால்களும், தீர்வுகளும் போன்ற தலைப்புகளில் கருத்தரங்குகள் நடத்தப்படும். இக்கருத்தரங்குகளில் தொழில்நுட்ப வல்லுநர்களும், அனுபவமிக்க வேளாண் பெருமக்களும், ஏற்றுமதியாளர்களும், உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு பல்வேறு பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவிருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெறத் தேவையான முன்னேற்பாடுகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆய்வு செய்து அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கினார்.

மேலும், வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் பெருவாரியான வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்பதற்காக, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் உழவர்களை அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும். இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர் என்றும், இவ்வாறு தமிழ்நாடு அரசால் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற உள்ள இவ்வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் உழவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் உழவர் பெருமக்களையும் பொதுமக்களையும் கேட்டுக் கொண்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகரக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் முன்னிலையில் கழகக் கொடியேற்றி, கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினர். இதில் கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர் செ.உமா மகேஸ்வரி, க.நடராசன், ஆ.ராமசாமி, செங்குட்டுவன், தேவி முருகேசன், ஆ.சரவணன், பா.குணராஜ், கொ.இராமதாஸ், வெ.ஜோதி, மின்னல் அ.நாகராஜ், போலார் ஆர்.சம்பத், எம்.எஸ்.மணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நீதிபதிகள் ஓய்வுக்குப்பிறகு

புதிய பதவி பெறுவது - தேர்தலில் போட்டியிடுவது தவறு!

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் பேச்சு!

லண்டன், ஜூன் 6 -

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது மற்றும் தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கவாய் தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது. இந்நிலையில், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெறுவது, தேர்தலில் போட்டியிடுவது தார்மீக அடிப்படையில் தவறு என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்ற வட்டமேசை ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு புதிய பதவி பெற்றால், நீதித் துறை மீதான மக்களின் நம்பிக்கை சிதைந்து விடும் என்றும் கவலை தெரிவித்தார்.

நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசின் பல்வேறு பதவிகளில் நியமிக்கப்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது.

அரசு பொதுத் தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு கேடயம், பரிசுப் பொருட்கள்!

ச.முரசொலி எம்.பி. நேரில் சென்று வழங்கி வாழ்த்து!

தஞ்சாவூர், ஜூன் 6 -

"பள்ளியை தேடி தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர்" என்ற திட்டத்தின் படி, தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 2024-25 ஆம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு பொது தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கு தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி நேரில் சென்று தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை பாராட்டி வாழ்த்தினார்.

"பள்ளிகளை தேடி தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர்" என்ற திட்டத்தில் தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பொது தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி நேரில் சென்று ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். தஞ்சை நாடாளுமன்ற தொகுதி தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு, மன்னார்குடி, பட்டுக்கோட்டை, பேராவூரணி ஆகிய தொகுதிகளை உள்ளடக்கியதாகும். அதில் பனையக்கோட்டை, பொன்னாப்பூர், கருக்காடிப்பட்டி, திருமங்கலக் கோட்டை கீழையூர், நெய்வாசல், நாட்டுசாலை, சிரமேல்குடி, கழுகுபுலிக்காடு, ஆவணம், கரிசவயல், வல்லம், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி தஞ்சாவூர், மேலதிருப்பந்துருத்தி, ஆலங்கோட்டை ஆகிய பள்ளிகளில் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்கு தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி நேரில் சென்று தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். அப்போது பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பொன்னாடை அணிவித்து, கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

முதல் கட்டமாக தஞ்சையை அடுத்த நெய்வாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் தஞ்சை எம்.பி. நேரில் சென்று பாராட்டினார்.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்....

பள்ளிகளை தேடி தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் என்ற திட்டம் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆறு தொகுதிகளில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12ஆம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளை தேர்ந்தெடுத்து அந்த பள்ளியின் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டும் வகையில் பொன்னாடை போற்றி, கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. அடுத்த கட்டமாக பத்தாம் வகுப்பில் 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கும் வழங்கப்பட உள்ளது. இது மாணவர்கள் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இருக்கும். கடந்த சில தினங்களுக்கு முன்பு தஞ்சை நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மாணவ மாணவர்கள் அவர்களது பெற்றோர்களை தஞ்சை நாடாளுமன்ற அலுவலகம் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டது..

100 சதவீத வெற்றி என்பது ஆசிரியர்களின் முயற்சிக்கு கிடைத்த வெற்றி எனவே அவர்களை பாராட்டும் விதத்தில் இம் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

திருவள்ளூர் மாவட்டம் கொள்ளுமேடு அரசினர் பள்ளி வளாகத்தில்

20 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் - பசுமைச் சூழலோடு தரம் உயர்த்தப்பட்ட பசுமைப் பள்ளி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜூன் 6-

திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் ஒன்றியம் கொள்ளுமேடு அரசினர் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பாக ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளியின் உட்கட்டமைப்புகள் பசுமை சூழலோடு தரம் உயர்த்தப்பட்ட பசுமைப் பள்ளியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை சார்பாக மாநிலம் முழுவதும் 3 கட்டங்களாக பசுமை பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளியின் உட்கட்டமைப்புகள் பசுமை சூழலோடு தரம் உயர்த்தப்பட்டு வருகிறது.அதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், கொள்ளுமேடு அரசினர் உயர்நிலைப் பள்ளி மாவட்டத்தின் முதல் பசுமை பள்ளியாக தேர்வு செய்யப்பட்டது. போதிய அடிப்படை வசதியின்றி இருந்த இப்பள்ளி பசுமை திட்ட நிதியோடு மாவட்ட ஆட்சியரின் சீரிய முயற்சினால், சானிடேஷன் பர்ஸ்ட் தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தற்போது மேம்படுத்தப்பட்ட பசுமை பள்ளியாக உருவெடுத்து இத்திட்டத்தின்படி பள்ளியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு, நீர் தேக்க தொட்டி, சூரிய மின் சக்தி தகடுகள், காய்கறி தோட்டம், மூலிகை தோட்டம் மற்றும் மண்புழு உரம் தயாரிப்பு அமைப்புகள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் சானிடேஷன் பர்ஸ்ட் தொண்டு நிறுவனம் சார்பாக பள்ளி வளாகம் முழுவதும் மாட்டு சாணத்தால் உருவாக்கப்பட்ட பிரக்ருதி வண்ணப் பூச்சு, பள்ளி வளாகம் முழுவதும் பாதுகாப்பு இரும்பு வேலி, சூரிய மின் சக்தியை மேம்படுத்த சூரிய ஒளி எதிரொளிப்பு வண்ணப்பூச்சு (Solar reflectance Index)மாணவிகளின் சுகாதார மேம்பாட்டிற்காக சானிடரி நாப்கின் எரியூட்டி (Incinerator). இத்துடன் நமது மாவட்டத்தின் சிறப்புகளை பிரதிபலிக்கும் வகையில்,ஆதிமனிதன் வாழ்ந்த குடியம் குகை, பழவேற்காடு ஏரி மற்றும் வலசை பறவைகள் சார்ந்த அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு பசுமை பள்ளியின் முக்கியத்து வத்தை உணர்த்தும் வகையில் 10 விழிப்புணர்வு அமர்வுகள் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களால் வழங்கப்பட்டது.

கார்பன் வெளியீட்டு அளவினை கட்டுப்படுத்தி நிகர பூஜ்ய நிலைக்கு கொண்டு செல்வது, மாணவர்களிடம் பசுமை சார்ந்த சிந்தனையை மேம்படுத்துவது, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போன்றவை இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். மேலும், மூன்றாம் கட்ட பசுமை பள்ளி திட்டத்தில் சுந்தரம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருமழிசைஅரசினர் மேல்நிலைப்பள்ளி, குத்தம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளி, திருக்கண்டலம் ஆகிய மூன்று பள்ளிகள் தேர்வாகி உள்ளன. மேற்கண்ட பள்ளிகள் இவ்வாண்டிற்குள் மேம்படுத்தப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டு வர உள்ளது என அமைச்சர் சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப் தலைமையில், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், மாவட்ட வன அலுவலர் சுப்பையா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோமதி, வேளாண் செயற்பொறியாளர் சரவணன் மாவட்ட பசுமை தோழர். முனைவர்.சுருதி மற்றும் பல்வேறு துறைசார்ந்த அலுவலர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், காரமடை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் சிறுமுகையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.கல்யாணசுந்தரம் தலைமையில் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் கவிதா கல்யாணசுந்தரம், சிறுமுகை பேரூர்ச் செயலாளர் உதயகுமார் முன்னிலையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் பேரூராட்சி தலைவர் மாலதி உதயகுமார், துணைத் தலைவர் செந்தில்குமார், காரமடை கிழக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஆலயம் பாலு உள்பட பேரூராட்சி உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.